


# ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம்

Registered Non-Profit Corporation # 923023

## எமக்கென ஒரு சொந்த இல்லம்

**38 வருட கால அக்கறையும் புரிந்துணர்வும்**

# ஒன்ராறியோ முதுதமிழர் மன்றம்

ஒன்ராறியோ முதுதமிழர் மன்றம் தமிழ் மூத்தோருக்கு ஏற்ற சேவைகளை ஒன்றாரியோவில் 38 வருடங்களுக்கு மேலாக அதன் அங்கத்தவர்களுக்கும் சமூகத்துக்கும் வழங்கி வருகின்றதொரு லாப நோக்கற்றதொரு அமைப்பாகும்.

இந்த மன்றம் 1986 இல் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் தமிழ் மூத்தோருக்கு சேவையாற்றுவதில் முன்னணியில் இருப்பதோடு அவர்கள் தமது வாழ்க்கையை சுதந்திரமாக, ஆரோக்கியமாக, அர்த்தமுள்ளதாக வாழ வழியமைத்து கொடுத்து வருகிறது. இந்த அமைப்பினால் முன்னெடுக்கப்படும் திட்டங்களின் மூலம், மன்ற அங்கத்தவர்கள் தம்மை மேம்படுத்தி கொள்வதோடு மட்டுமன்றி சமூகத்துக்கும் தம்மாலான பங்களிப்பை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

38வது வருடத்திட்குள் காலடி எடுத்து வைத்திருக்கும் மன்றம் எமக்கான சொந்த இல்லம் என பெருமையோடு சொல்லி கொள்ளகூடிய வகையில் ஒரு சொந்த இல்லத்தை வாங்கி விட வேண்டும் என்ற பெரு முனைப்போடு முன் வந்துள்ளது. இதற்கான வளங்கள் எம்மிடம் உள்ளது என்பதை நாங்கள் அறிவோம், ஆனால் இந்த மகத்தான நோக்கை நாம் நிறைவேற்றுவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலமே இதனை சாத்தியமாக்க முடியும்.

இந்த அமைப்பு தமது சேவைகளையும் செயற்பாடுகளையும் தமது சொந்த வீட்டில் இருந்து கொண்டே நிறைவேற்ற வேண்டும் என்பது அதன் நீண்ட நாள் கனவாக இருந்து வருகிறது. இந்த கனவை நனவாக்குவதற்கான நேரம் வந்து விட்டது, காலதாமதமின்றி எமது இலக்கை அடையவும், நிதி திரட்டவும், STC க்கு சொந்தமாக கட்டிடம் வாங்க ஆலோசனை வழங்கவும், உதவும் வகையில் ஒரு தெரிவுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த குழுவினால் மட்டுமே விரும்பிய இலக்கை அடைய முடியாது: இந்த நோக்கத்தை நிறைவேற்ற பலரது நிபுணத்துவம், உழைப்பு ஆலோசனை, நேரம் என பல விடயங்கள் தேவைப்படுகிறது. நாங்கள் ஒரு வலுவான சமூகத்தை சார்ந்தவர்கள் என்ற வகையில் எமக்கான சொந்த அலுவலகம் ஒன்றினை வாங்குவது எங்கள் எல்லைக்கு அப்பாற்பட்டது அல்ல. நாம் அனைவரும் ஒன்றிணைந்தால் அதனை விரைவில் செயற்படுத்துவது சாத்தியமே.

தமது கடின உழைப்பின் பலனாக கனடாவில் உள்ள தமிழ் சமூகத்தின் முன்னோடிகளாக திகழும் எமது மன்றம், நமது வருங்கால சந்ததியினருக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டியதுடன், அவர்களுக்கு எம்மை நினைவு படுத்தும் வகையில் ஒரு அடையாளத்தை உருவாக்கி விட்டு செல்ல வேண்டியது எமது கடமையாகிறது. நமது மன்றத்தின் பெயரை தாங்கி நிற்க போகும் ஒரு சொந்த இல்லம், நம் குழந்தைகள் பயன்பெறும் நேரம் வரும்போது, சந்தேகத்திற்கு இடமின்றி அவர்கள் பெருமைப்படும் வகையில் இருக்க போகிறது என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. எமது குழந்தைகளுக்காக, எமது அடுத்த தலைமுறையினருக்காக எமக்கான இல்லத்தை நாமே உருவாக்குவோம்.

**"நாம் என்ன செய்ய முடியும், நாம் என்ன செய்ய முடியும்,**
**நாம் என்ன செய்ய முடியும் என்பது மட்டுமே போதுமானது" - ஏஎல் வில்லியம்**




**கேள்வி: மன்றத்துக்கு ஒரு சொந்த இல்லத்தை வாங்குவதன் முதன்மை நோக்கம் என்ன?**

**பதில்:** ஒன்ராறியோ முதுதமிழர் மன்றம் அதன் சேவைகளை உறுப்பினர்களுக்கும், சமூகத்திற்கும், திறம்பட செய்வதற்கு நிரந்தர இடம் தேவை: மன்றத்தின் தற்போதைய அலுவலக வாடகை மற்றும் விதிமுறைகள்/நிபந்தனைகள் விரைவில் மாறவுள்ளன. மேலும் முழு கட்டிடமும் தற்போதைய நில உரிமையாளரால் புதிய முதலீட்டாளருக்கு விற்கப்படுவதால்,

மன்றத்தினால் வாடகை ஒப்பந்தத்தை நீண்ட காலத்திற்கு புதுப்பிக்க முடியாது. மன்ற உறுப்பினர்களாக உள்ள நிபுணர்களால் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில், தற்போதைய அலுவலக வாடகை சொந்த அலுவலகத்தை வாங்குவதற்கான செலவு ஒப்பீட்டளவில் அதிகமாக உள்ளது.

**கேள்வி: திட்டத்தின் பங்குதாரர்கள் மற்றும் நிதியளிப்பவர்கள் யார்?**

**பதில்:** தற்போது எங்களிடம் சுமார் 700 செயலில் உள்ள உறுப்பினர்கள் உள்ளனர். ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு பங்குதாரர். மற்றும் எங்கள் சொந்த வீடு ஒவ்வொரு உறுப்பினருக்கும் பயனளிக்கும் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். மேலும் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்கள் குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகளை இந்த திட்டத்தில் முதலீடு செய்ய ஊக்குவிப்பது அவசியமாகிறது, இறுதியில், மன்றத்தின் சொந்த இல்லம் நமது அடுத்த தலைமுறையினருக்கு பயனளிக்கும் ஒரு விடயமாகவே இருக்கப்போகிறது. இந்த திட்டத்திற்கு ஆதரவளிக்க அனைவரும் வணிக நிறுவனங்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் சமூகத்தில் உள்ள பிற நலன் விரும்பிகளையும் நாடுவதால் மன்றமும், சமூகமும் பயனடைய கூடியதாக இருக்கும். இதுவொரு தனி அமைப்புக்கான திட்டமல்ல, தமிழ் சமூகத்திட்கான திட்டமாகும்.

**கேள்வி: இந்த திட்டத்துக்கான பட்ஜெட் என்ன?**

பதில்: திட்டத்தின் மொத்த நிதி $700,000 ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது, இதில் நில பரிமாற்ற வரி மற்றும் வாங்குதலுடன் தொடர்புடைய பிற கொடுப்பனவுகள் அடங்கும். STC குறைந்தபட்சம் $400,000 திரட்ட வேண்டும். மீதியானது அடமானம் மற்றும் STC கையிருப்பு நிதியின் ஒரு பகுதியாக இருக்கும்

**கேள்வி: இந்த திட்டத்திற்கு யார் பொறுப்பு?**

**பதில்:** தற்போதைய தலைவர், தெரிவுக்குழுத் தலைவர், பொருளாளர் மற்றும் குழுவின் மற்ற உறுப்பினர்களைக் கொண்ட தெரிவு கட்டிடக் குழு திட்டத்தை பொறுப்பெடுக்கிறது.

- திட்டத்தின் கணக்குகள்,
- பொருத்தமான இடம் மற்றும் இல்ல தேர்வு,
- விலையை பேச்சுவார்த்தை நடத்தவும், ரியல் எஸ்டேட் முகவர் மற்றும் ஒரு வழக்கறிஞரை நியமிக்கவும்,
- உறுப்பினர்களுக்கு சரியான நேரத்தில் அறிக்கைகளை வழங்கவும்: திரட்டப்பட்ட தொகைகள் மற்றும் செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்தின் நிலை,
- வாங்குதலை முடித்தல்

குறித்த விடயங்களுக்கு , தெரிவுக் கட்டிடக் குழு பொறுப்பாக இருக்கும்.

**கேள்வி: இந்த திட்டத்துக்கான காலவரிசை என்ன?**

**பதில்:** திட்டம் டிசம்பர் 31, 2026 அன்று அல்லது அதற்கு முன் முடிக்கப்படும். எதிர்பாராத காரணங்களால், திட்டம் செயல்படத் தவறினால், தனிநபர்கள் அளித்த நிதிபங்களிப்பு அவர்களுக்கு அல்லது அவர்களின் வாரிசுகள், நிறைவேற்றுபவர்கள் மற்றும் அறங்காவலர்களுக்கு திரும்ப வழங்கப்படும். அடையாளம் காண முடியாத மூலங்களிலிருந்து வரும் நிதிகள் STC இயக்க நிதியின் ஒரு பகுதியாகும்.

இந்த திட்டத்தில் நீங்கள் ஏன் ஈடுபட விரும்புகிறீர்கள் என்பதன் அடிப்படை உணர்வுகளை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. ஒன்ராறியோ முதுதமிழர் மன்றத்துக்கு ஒரு நிரந்தர இல்லத்தை பெற்று கொள்ளும் இந்த முயற்சிக்கு ஆதரவை வழங்குவதைக் கருத்தில் கொண்டதால், இந்த திட்டத்திற்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு தோன்றியிருக்கும். இந்த விடயத்தில் உங்கள் அனைவரின் எண்ணங்களையும், உணர்வுகளையும் நாங்கள் மதிக்கிறோம், மேலும் உங்கள் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய எங்களால் ஆன முழு முயற்சியையும் எடுப்போம் என உறுதியளிக்கிறோம்.

**எமது சொந்த இல்லம் எமது வருங்கால கனவுகளை நிஜமாக்கும் இல்லமாக அமையட்டும்**




**பணம் செலுத்தும் முறை**

காசோலைகள் பின்வரும் பெயரில் எழுதப்பட வேண்டும்
Senior Tamils' Centre of Ontario

மின்வழி நிதி மாற்றம் (E transfer)
seniortamils@gmail.com

எமக்கென்றொரு தனி அடையாளத்துடன் எமக்கென்றொரு ஒரு சொந்த இல்லம்.
சமூகத்துக்கும், மூத்தோருக்கும், எமது அடுத்த சந்ததிக்கும்,
சிறப்பாக சேவையாற்ற ஒரு சொந்த இல்லம்.
ஆரோக்கியமான ஒரு சமூகத்தை உருவாக்கவும்,
மறக்க முடியாத நினைவுகளை உருவாக்கவும் ஒரு இல்லம்.
கனவுகள் பல படைத்திட போகும் எமது சொந்த இல்லம்.

**SENIOR TAMILS' CENTRE OF ONTARIO**
**5200 Finch Ave. E, # 203**
**Scarborough ON M1S 4Z2**
**Tel: 416-496-2897**
**Email: admin@seniortamilscentre.org**
**Web: www.seniortamilscentre.com**
**Face book:**
**https://www.facebook.com/SeniorTamilsCentreofOntario**